<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.34/2022 | Date | : 09.09.2025 |
| Deposition of Witness for | : அ.சா.2 | Taluk | : |
| Name | : அருணகிரி | Calling | : |
| Father Name | : மணி | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 09.09.2025.

<u>(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).</u>

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை :</u>**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், அங்காளம்மன் கோவில் தெருவில் வசித்து திருப்பூரில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். கடந்த 01-11-2021ம் தேதி, காலை சுமார் 11.45 மணியளவில் எடப்பாடியில் இருந்து குமாரபாளையம் நோக்கி TN 52 F 7732 என்ற பதிவு எண் கொண்ட Honda Unicorn இருசக்கர வாகனத்தில் புளியம்பட்டி என்ற இடத்தில் சாலையின் இடதுபுறமாக சென்றுகொண்டிருந்தபோது, எதிரே Splendor plus இருசக்கர வாகனம் வேகமாக வந்துகொண்டிருந்தது.

2) அப்போது, அந்த Splendor plus இருசக்கர வாகனம் வலதுபுறமாக ஏறி என் இருசக்கர வாகனத்தின்மீது மோதிவிட்டது. மோதியவுடன் நான் கீழே விழுந்துவிட்டேன். எனக்கு வலது காலிலும், வலது தோள்பட்டையிலும் அடிப்பட்டது.

Splendor plus இருசக்கர வாகனத்தில் இரண்டு நபர்கள் வந்தார்கள். அந்த வண்டியில் வந்த நபர்களுக்கும் பலத்த அடிப்பட்டது. அதில் வந்த பால்ராஜ், என்பவர் இறந்துவிட்டதாக கூறினார்கள். என்மீது மோதிய இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் ஆனந்தன் என்று கூறினார்கள். அவரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும்.

3) விபத்திற்கு காரணம் Splendor plus இருசக்கர வாகனத்தின் ஓட்டுநர் பாதை மாறி வந்து என்மீது மோதியது தான். அடிப்பட்டவுடன் குமாரபாளையம் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று மேல்சிகிச்சைக்காக பவானியில் உள்ள பவானி மெடிக்கல் சென்டர் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேன். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>**குறுக்கு விசாரணை**</u> :-

1) விபத்து நடந்த சமயத்தில் எனக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் சென்டர் மீடியன் அருகே தான் சென்றுகொண்டிருந்தேன் என்றால் சரியல்ல. எதிரே வந்த வாகனத்தின் பின்னால் உட்கார்ந்திருந்தவர் மதுபோதையில் இருந்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. அடிப்பட்ட மூவரும் ஒரே ஆம்புலன்ஸ்-ல் தான் சிசிக்சைக்கு சென்றோம் என்றால் சரியல்ல, நானும், விபத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தின் ஓட்டுநரும் ஒரே ஆம்புலன்ஸ்-ல் சென்றோம்.

2) விபத்து ஏற்பட்டவுடன் நானும், விபத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தின் ஓட்டுநரும் மயக்கமடைந்துவிட்டோம் என்றால் மயக்கமடைந்தேன், அருகில் இருந்தவர்கள் தண்ணீர் ஊற்றியதால் என்ன நடந்து கொண்டிருக்கிறது

என்பது தெரிந்தது. விபத்து நடந்தவுடன் யார் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்தார்கள் என்று நான் கவனிக்கவில்லை என்றால் சரிதான், மருத்துவமனையில் தான் சொல்லி தெரிந்துகொண்டேன். விபத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்து வந்தவர் மதுபோதையில் தடுமாறியதால் ஓட்டுநர் கட்டுப்படுத்த முடியாமல் சென்டர் மீடியன் அருகே வந்த என்மீது மோதிவிட்டார் என்றால் சரியல்ல.

3) போலிசார் என்மீது வழக்கு பதிவு செய்து விடுவார்கள் என்பதால் எதிரிமீது பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு காரணம் நான் தான் என்றும், நான் தான் இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் இல்லாமல் சென்று விபத்தை ஏற்படுத்தி கொண்டேன் என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,

Sd/-Arunagiri

Judicial Magistrate No.1,
Sankari.